JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW-   - Pw-7  Witness
for Prosecution

| CC.No. | 156/2025 | Crime No. | 152/2023 | Station | Ammapet |
|---|---|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| Name | **PW7– பழனிசாமி** | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 28th day of January 2026 | | | |

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தமிழ்நாடு காவல்துறையில் உதவி ஆய்வாளராக பணியாற்றி பணி ஓய்வு பெற்று தற்போது பவானியில் வசித்து வருகிறேன். நான் அம்மாபேட்டை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது கடந்த 23.062023 ஆம் தேதியன்று மதியம் 13.00 மணிக்கு நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் தர்மலிங்கம் என்பவர் நிலைய அலுவலில் இருந்தபோது பூனாச்சி, முகாசிப்புதூர் மாரியம்மன் கோவில் அருகில் உள்ள ஏடி காலனியில் வசிக்கும் கந்தசாமி என்பவரது மனைவி சங்கீதா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று காவல் நிலைய குற்ற எண்.152/ 2023, சட்டப்பிரிவுகள் 279, 304(A) IPC கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் புலன் விசாரணைக்காக வழக்கு கோப்பை பெற்ற நான் அன்றைய தினம் மதியம் 13. 30 மணிக்கு சம்பவயிடம் சென்று சம்பவயிட சாட்சிகளான அங்கப்பன் மற்றும் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசரும், மாதிரி வரைபடமும் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் சாட்சிகள் சங்கீதா, நவீன், குமரேசன், பிரதாப், ஆகாஷ், அங்கப்பன் மற்றும் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர் அங்கிருந்து அந்தியூர் அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு விபத்தில் இறந்துபோன சிறுவன் ஹரிஹரசுதன் என்பவரது பிரேதத்தை பார்வையிட்டு

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.01.28 06:46:24 +0530

பகல் 14.00 மணி முதல் மாலை 16.00 மணி வரை பஞ்சாயத்தாரர்கள் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் இறப்பின் மருத்துவ ரீதியான காரணம் அறியும் பொருட்டு பிரேதத்தை பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் பிரேத விசாரணை சாட்சிகளான கந்தசாமி, செல்வராஜ் மற்றும் அகல்யா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சி சங்கீதா என்பவரை மறு விசாரணை செய்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் தொடர் புலன் விசாரணைக்காக வழக்கு கோப்பை நிலைய பொறுப்பு ஆய்வாளர் திரு.செந்தில்குமார் அவர்களிடம் ஒப்படைத்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் இறந்துபோன நபர் ஒரு சிறுவர் என்றால், சரிதான். இந்த வழக்கில் இறந்துபோன நபர் தான் வாகனத்தை இயக்க தெரியாமல் இயக்கி விபத்தை ஏற்படுத்தினார் என்கின்ற விவரத்தை எனது புலன் விசாரணையில் நான் தெரிந்து கொண்டேனா என்றால், சரியல்ல. இந்த வழக்கில் இறந்துபோன நபரின் கவனக்குறைவு தான் காரணம் என்றால், சரியல்ல.

நான் முதல் விசாரணையில் சொல்வதுபோல், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் புகார் எதுவும் பெறப்படவில்லை என்றாலும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றாலும், வழக்கு ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றால், சரியல்ல. நான் வழக்கை முறையாக புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால், சரியல்ல.

**மறு விசாரணை இல்லை .**

Signature of Witness

Taken down before me in open court
readover to the witness in the presence

of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.01.28 06:46:11 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.